597— [1992 ஏப்ரல் 23

காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி.

*7813 திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் மருத்துவக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. மா. சா. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை, பசும்பொன், இராமநாதபுரம் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், மருத்துவப் படிப்பு படிக்க தற்போது மதுரை, தஞ்சை நகரங்களிலே மருத்துவக் கல்லூரிகள் இருப்பதால், அங்கேதான் செல்கிறார்கள். காரைக்குடியிலே தற்போது கலைக்கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில் நுட்பக் கல்லூரி போன்ற கல்லூரிகள் நிறைய உள்ளன. மருத்துவக் கல்லூரி இல்லாதது அந்தப் பகுதியிலே பெரும் குறையாக இருக்கிறது. புரட்சித் தலைவர் அவர்களால் துவக்கப்பட்ட காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்தில் அவரது அரசியல் வாரிசான மாண்புமிகு தமிழக முதல்வர், இதய தெய்வம், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியிலே, மருத்துவக் கல்லூரியைத் துவங்கி, அந்தப் பகுதி மக்களுடைய நெடு நாள் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அதற்கான வாய்ப்பு இல்லை. காரணம், தனியார் துறையிலே நாம் மருத்துவக் கல்லூரியை

அனுமதிப்பதில்லை என்ற கொள்கை முடிவை எடுத்திருக்கிறோம். அங்கே மருத்துவக் கல்லூரி இருந்தால் தான் அந்தப் பகுதி மாணவர்கள் படிக்க முடியும் என்பதல்ல. எங்கே இருந்தாலும் மதிப்பெண் அடிப்படையிலேதான் மாண வர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அங்கே ஏற்கனவே இருக்கிற கல்லூரிகளிலே படிப்பதற்கான வாய்ப்புக்கள் அவர் களுக்கு இருக்கின்றன. பெரும்பகுதி, வெளியிலிருந்து வரக்கூடிய மாணவர்கள் அந்த மருத்துவக் கல்லூரி இருக்கிற ஊரிலே தங்கித்தான் படிக்கிறார்கள். 50 கிலோமீட்டர் தூரத்திலே இருந்தால் கூட, அவர்கள் தங்கித்தான் படிக்க விரும்புகிறார்கள். எனவே, மதுரையிலிருந்து படிப்பதிலே, அவர்களுக்கு பிரச்சினை இருக்காது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி கற்பகம் இளங்கோ.

திருமதி கற்பகம் இளங்கோ: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வியைப் பொறுத்தவரை, அனைத்துத் துறைகளிலேயும் சிறந்து விளங்கும் காரைக்குடியில், அழகப்பா பல்கலைக் கழகம், வள்ளல் அழகப்பச் செட்டியாரின் பெயரில் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது. இருப்பினும், மருத்துவக் கல்லூரி இல்லாதது மிகவும் பெரும் குறையாக அமைந்துள்ளது. மருத்துவக் கல்லூரியை அமைப் பதற்கு இடம் மிகவும் முக்கியமானது. அங்கு அதற்குரிய இடவசதி அனைத்தும், அழகப்பா பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ளது. என் தொகுதி மக்களின் நீண்டகால பெரும் குறையாக அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி, அழகப்பா பல்கலைக் கழகத்திலே அமைய வேண்டும் என்ற அந்தக் கனவை, நன வாக்கும் பொருட்டும், அவர்களது கல்வித் தரத்தை உயர்த் தும் பொருட்டும்—நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் மதுரையிலே சென்று தங்கிப்படிப்பது கஷ்டமாக இருக்காது என்று கூறினார்கள், ஆனால் அனைவரின் கல்வித் தரத்தை உயர்த்து வதற்கு வெகு தொலைவில் சென்று படிக்க வேண்டியிருப் பதினால்—அந்தக் குறையைப் போக்கி, வரும் நிதியாண்டி லாவது, கருணையோடு பரிசீலனை செய்து, அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிலையத்தில் தரம் குறைந்து விடக்கூடாது என்பதற்காகத்தான் நாம் இவ்வளவு கவனமாக இருக்கவேண்டியதாக இருக்கிறது. இடம் மட்டுமே அதற்குப் போதாது. அங்கே போதிய அளவிற்கு மருத்துவமனைகள் வேண்டும். மருத்துவமனைகள் இருந்தாலும் கூட அதற்கு தரமான நல்ல நோயாளிகள் கிடைக்கவேண்டும். (சிரிப்பு) சில மருத்துவமனைகளிலே போய்ப் பார்த்தால், நோயாளிகள்

கிடைக்கமாட்டார்கள். காரணம் மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கு மிக முக்கியமானது, நோயாளிகள் அங்கே இருக்க வேண்டும். எனவே, இன்றைக்கு நாம் எடுக்கின்ற நடவடிக்கையைப் பார்த்தால், இன்னும் கொஞ்ச காலத்திற்குப் பின்னால் மாணவர்கள் படிப்பதற்கே கூட, தெரிந்துகொள்வதற்கே கூட நோயாளிகள் கிடைக்காத நிலைமை ஏற்படும் என்ற அளவிற்கு நடவடிக்கையை மருத்துவ முகாம்கள் மூலமாக நாம் எடுத்துக்கொண்டு இருக்கிறோம். அதனால்தான், இந்த தரத்தை மனதிலே வைத்துத்தான் கண்ட இடத்திலே, இடம் இருக்கிற இடத்திலே எல்லாம் மருத்துவக் கல்லூரியை ஆரம்பித்துவிடக்கூடாது, எல்லா நிலைமைகளை ஆலோசித்துத்தான் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்கவேண்டுமென்ற வகையில்தான் மிகக் கட்டுப்பாடாக நாம் வைத்திருக்கிறோம். எனவே, இன்றைக்கு இருக்கிற 10 மருத்துவக் கல்லூரிகள் அரசுக்குச் சொந்தமானதாக இருக்கிறது. ஏற்கனவே தனியாரிடத்திலே 3 இருக்கிறது. போக்குவரத்துக் கழகத்திலே ஒன்று இருக்கிறது. இதற்குமேலே தேவை என்ற சூழ்நிலை ஏற்படுமேயானால் எங்கே ஆரம்பிக்கலாம் என்பதை ஆய்வு செய்து, அதற்குப் பின்னாலே யோசிக்கலாம்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வ. சத்தியமூர்த்தி.

திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கண்ட இடத்தில் துவங்கக் கூடாது என்று சொல்லி, எங்களுடைய தென் மாவட்டங்களைக் கண்ட இடமாக இந்த மாநிலம் கருதிவிடக் கூடாது என்பதை நினைவு படுத்தி, மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மூலம்தான் மருத்துவக் கல்லூரி துவங்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. அழகப்பா பல்கலைக் கழகத்தின் மூலம் அந்த மருத்துவக் கல்லூரி துவங்க வாய்ப்பில்லை என்று சொன்னால், பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தின் தலைநகரான சிவகெங்கை அல்லது இராமநாதபுரம் மாவட்டத்தின் தலைநகரான இராமநாதபுரத்தில் ஒரு புதிய மருத்துவக் கல்லூரியைத் துவங்க ஆய்வு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்கள் கண்ட இடமல்ல. எங்களுக்கு அது கண்கண்ட இடம். காரணம் ஒவ்வொரு முறையும் எங்களுக்கு மிகப் பெரிய ஒத்துழைப்பு கொடுத்துக் கொண்டிருக்கிற அந்த மாவட்டங்களை நாங்கள் மறக்க முடியாது. ஆனால் அதே நேரத்திலே இந்தக் கல்லூரியினுடைய தரத்தை நாம் கவனிக்க வேண்டிய அவசியம் இருக்கிற

காரணத்தால் இதையெல்லாம் நான் சொன்னேன். இதில் நிச்சய மாக உங்களுடைய உணர்வுகள் எனக்குப் புரிகிறது. இருந்தாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கல்லூரி, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு கல்லூரி என்று போனால் இந்த மருத்து வர்களுடைய தரமே போய்விடும். எனவே இதைப் பற்றி தீர ஆலோசித்து நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 598, திரு. எல். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

598—

கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

*575 திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் ஆலங்குளம் பகுதியில் கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் பகுதியில், கூட்டுறவு நூற்பாலை ஒன்று அமைக்கும் திட்டம் பற்றிய செயற் குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை

திரு, எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று சொல்லும்போதே—எங்களுடைய பகுதி மிகவும் பின்தங்கிய பகுதி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். ஏனென்றால் அவர்களுடைய தொகுதியில் ஏராளமாக எங்கள் பகுதி மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதி வறட்சிப் பகுதி யாக இருப்பதோடு மட்டுமல்லாமல், வேலைவாய்ப்பிற்கு வழி யில்லாமல் தான் இன்றைக்குசென்னையிலே குடியிருக்கக்கூடிய சூழ் நிலை இருக்கிறது. 'Face is the index of the mind, என்று சொல் வதைப் போல அமைச்சரவர்கள் சொல்லும் போதே— அந்தப் பகுதியிலே நூற்பாலை அமைப்பதற்கு இல்லையே என்று சொல்லக்கூடிய அளவிலே அவருடைய முகத்திலே அந்த வருத்தம், அவருடைய உள்ளத்திலே இருப்பது எனக்குத் தெரிந்தது. ஆதலால் மாண்புமிகு அமைச்சரவர்கள் இதை மறுபரிசீலனை செய்து நம்முடைய புரட்சித் தலைவி அவர் களுடைய ஆட்சிக் காலத்தில் எங்கள் பகுதிக்கு, ஆலங்குளத்தில், அந்தப் பகுதியைச் சுற்றியுள்ள மக்களுக்கு வாழ்வு அளிக்கும் வகையில் ஒரு கூட்டுறவு நூற்பாலை அமைப்பதற்கு மறு பரிசீலனை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்,